ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 27—2—44 சுபானு மாசி 14—ஞாயிறு | இதழ் 50.


தொடர்கதை

## பார்வதி பி. ஏ;

சௌமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-மேரிபி ஜமீன்தார், அறிமுகப் படுத்தப்படுகிறார். அவருக்கு வாரிசாகவர இருந்தும் பார்த்திபன் என்னும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. ஜமீன்தார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறனது ஜமீன்தார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப்படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும்பத்திரிகை நடத்தப்படுகிறது. தூக்கள் துரைதுரைபாரா, பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதமுண்டாகும்படி. வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறார். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு நரசிம்மன் என்பவன் காதலனாகிறான். பார்த்திபன், கதகளிநடனம் பார்க்கக் கேரளம் செல்கிறான். உத்தமி கருவுற்றாள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம்செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறான், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறாள். அந்த லேடிடாக்டர் லலிதாதன் கதையைக் கூறுகிறாள். பிறகு,....]

திலகா, கூறியதுகேட்டு நான் திடுக்கிட்டுப்போனேன், இவ்வளவு துடுக்குத்தனமாடிஉனக்கு? இதுதகுமா? உன்னால் எனக்கு விபரீதம் விளைகிறதே! இதுதானா விளையாட்டு? ஒருஆசிரியரின் மன அமைதியை அழித்தாய்! ஒரு உத்தம மாணாக்கனின் உள்ளத்திலே வேதனை வித்துக்களைத் தூவிவிட்டாய். புயலிற் சிக்கிய பூங்கொடி போன்ற நிலைமையை எனக்கு உண்டாக்கினாய். இப்படி எல்லாம் செய்பவளாமா? என்று திலகாவைக் கேட்கலாம் என்று தோன்றிற்று, கோபந்தான் எனக்கு. ஆனால், இனிக் கேட்டுப் பயன் என்ன? அவளைத் திட்டித்தான் என்னபயன்? காரியம் மிஞ்சுகிறது, இரு ஆடவரின் நெஞ்சிலே மூண்டுவிட்ட தீயை அணைக்கவேண்டும். இல்லையேல் என்பாடு ஆபத்தாகத்தான் முடியும். திலகாவிடம் மறுபடியும்கோபித்துக்கொண்டால், அவள், மேலும் எதாவது விஷமம்செய்வாள். அது அவள் சுபாவம். ஆகவே நான், திலகாவிடம் கோபித்துக்கொண்டதை வெளிக்குக் காட்டாமல், சிரித்தேன். அந்த அசட்டுச் சிரிப்புத், திலகாவை ஏமாற்றிவிடவில்லை. "நடந்தது நடந்துவிட்டது லலிதா! இனி நடக்கவேண்டியதைக் கவனி. யாருக்குப் பிரைஸ் விழப்போகிறது, புரபசர் பாஸ்கரனுக்கா, அல்லது அந்தப் புத்தகப்பூச்சிக்கா, அதைச்சொல்லு. என்னால் ஆகவேண்டியதைச் செய்கிறேன்" என்று திலகா கூறினாள்.

"என்ன திலகா! இப்படி எல்லாம், பேசுகிறாய்? நமக்கு அடுக்குமா? இப்படிப்பட்ட பேச்சு" என்றுநான் சற்றுக் கண்டனக்குரலுடன் கூறினேன்.

"லலி! இதோபார், பெண்ணாகட்டும் ஆணாகட்டும், இந்தக்கணை இருக்கிறதே, எந்தக்கணை, காதற்கணை, அதிலிருந்து மட்டும் தப்புவது கிடையாது. சிலபெண்கள் உன்னைப்போலப்பாசாங்குக்காரிகள் சிலர்என்னைப்போல வெளிப்படையாகப் பேசுபவர்கள்" என்று பொதுவிவாதம் புரியத் தயாரானாள் திலகா. அவளிடம் விவாதம் புரியக்கூடிய நிலையிலே நான் இல்லை. ஆகவே வினயமாகக் கேட்டேன் அவளை, இருஆடவரையும்,காதல்பாதையிலிருந்து திருப்பிவிட்டுவிடும்படி. அதற்கும் அவள் ஒருயோசனைகூறினாள். எப்படியாவது, என்மீது வெறுப்பு ஏற்படும்படி அந்த இரு ஆடவரிடமிருந்துதப்ப வேண்டும் என்பதற்காக, நான் திலகாகூறிய யோசனைக்குச்செவிசாய்த்தேன். கல்லூரித் தோட்டக்காரன் மகனின் தோளின்மீது சாய்ந்தேன், அந்தக்காட்சியைக்கண்டு, சீ! இவ்வளவு ஈனத்தனமானவளா இவள்,என்று புரபசரும், புல்மைபெறப்பாடுபட்ட மாணவனும் என்னை வெறுக்கவேண்டும் என்பதற்காக. "கேள் லலிதா! தான்காதலிக்கும்பெண், வேறு ஒருவனைக்காதலிக்கிறாள், என்று தெரிந்தால் அவர்கள், அப்பெண்ணை வெறுத்து ஒதுக்குவார்கள். ஆகவே உன்னைப், புரபசரும் மாணவமணியும் வெறுக்கவேண்டுமானால், நீ வேறு ஒருவரிடம் காதல்கொண்டிருப்பதாக நடிக்கவேண்டும், அந்தச்செய்தி தெரிந்தபோதும், அவர்களின், மனக்கோட்டை இடிந்துவிடும்" என்று திலகாகூறினாள். திகிலாக இருந்தது எனக்கு. "முள்ளை முள்கொண்டுதான் நீக்கவேண்டும்" என்று திலகா கூறிவிட்டுத்தன் ஏற்பாட்டினை விளக்கத்தொடங்கினாள். காலேஜ் பூந்தோட்டத்துக்காவற்காரனுக்கு ஒருமகனுண்டு. ஓரளவுக்குப் படித்தவன், வறுமையின் பயனாக மேற்படிப்புக்குப் போகவில்லை. தகப்பனாருக்கு உதவியாகத் தோட்டத்திலே வேலைசெய்துவந்தான். அவனுக்குச் சித்திரம் வரைவதிலே அபாரமான பிரேமை, திறமையுங்கூட! இயற்கையின் எழிலைச் சித்திரங்களாகத் தீட்டுவான், அவைகளைப் பாராட்டிப் பேசுவோரைப் பூஜிப்பான். ஆனால், ஒரு படத்தையாவது, விலைக்குத் தரமாட்டான். தான் பெற்றெடுத்த குழந்தையை, தாய்விற்பாளா? என் சித்திரங்கள், என்சிருஷ்டிகள்! அவைகளின் அழகைக்கண்டு அகமகிழலாம், விலைக்குப் பெறமுடியாது, என்று கூறிவிடுவான். கண்காட்சிச் சாலைகளுக்கு அனுப்பிவைத்தால் நல்லது என்று யாராவதுயோசனை கூறினால், "ஆமாம்! அனுப்பத்தான்வேண்டும், சித்திரக் கலையிலே வல்லவர்கள், கண்காட்சிகாணச்செல்லும் காலம்பிறக்கட்டும்," என்றுகூறுவான். அந்திவானம், இளமதி, பூங்கொடி, முதலிய பலஎழில்களை அவன், அழகுறத்தீட்டி அகமகிழ்ந்திருந்தான். அவனிடம் நான் காதல் கொண்டிருப்பதாக, நடிக்கவேண்டுமென்றும், அந்தச்செய்தி காதுக்கு எட்டியதும், புரபசர் பாஸ்கரனும் மாண

(௫-பக்கம் பார்க்க.)

# திராவிட நாடு

காஞ்சி 27—2—44 ஞாயிறு


## ஆளுக்கேற்றவேலை!

அரசியல் நெருக்கடியைத்தீர்க்க, பண்டிதமாளவியா ஒரு சர்வகட்சி மாநாடு கூட்ட ஏற்பாடுசெய்கிறார், என்றோர் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. இந்தச் சர்வகட்சிமாநாடு நடத்தும் ஏகபோக உரிமை, சாப்ரூ-ஜயக்கருக்குமட்டுமே உண்டு, என்றுநாம் நினைத்தோம். பொதுநலத்தொண்டு வேறுஎதுவும்செய்யும் பயிற்சியில்லா இப்பெரியவர்களின் பொழுது போக்குக்கு, இம்மாதிரியான மாநாடு கூட்டுவதாவது இருக்கத்தானே வேண்டுமென்றும் கருதினோம். இந்த உரிமையிலே, அரசியலிலே உழன்றுஉளம் ஒடிந்து, தேகம்வளைந்து, தேஜசுதேய்ந்து போய், காயகல்பஉதவியால் கைத்தடியின் துணையின் நிக்காலந்தள்ளலாம் என்று கருதும், மாளவியா, பிரவேசித்தது கேட்டு, மிரட்சி அடைந்தோம். சாப்ரூ-ஜயக்கருக்கு இருந்த ஒரேஒரு பொழுதுபோக்கும் போய்விட்டதே, பாபம், அம்முதியோர்கள் என்னசெய்வர் என்ற கவலை மேலிட்டது நமக்கு. பெயர்சர்வகட்சி என்றுஇருக்குமேயொழியத், தங்களின் அன்புக்குப் பாத்திரமான காங்கிரசை வாழ்த்துவதுதவிர வேறுஎங்காரியத்தையும் இந்தச்சர்வகட்சி மாநாடுகள் சாதித்ததில்லை—சாதிக்கவும் முடியாது. பெயர் புதிதுபுதிதாகச் சூட்டுவார்களேயொழிய நோக்கம் ஒரேவிதமாகவே இருப்பது வழக்கம். சென்றகிழமை அகில இந்திய ஆரியமாநாடு நடந்தது, என்ன பேசப்பட்டது? பாகிஸ்தானுக்குக் கண்டனம், தேசீயத்துக்கு மங்களம்! ஆகாகான் அரண்மனைக்கதவைத்தட்ட, ஆரிய மாநாடு முனைந்தது. இதேகாரியத்தைச் சிலசமயம் காங்கிரசின் பெயரால் செய்வர், சிலசமயம் தேசீயவாதிகள் என்ற பெயரால் செய்வர், மற்றும் சிலசமயங்களிலே சர்வகட்சி மாநாடு என்றபெயரால் செய்வர். எனவே, இம்மாநாடுகள் ஒரு பயனும்தரா, என்று பெரியார், கூறுவதிலேதவறென்ன இருக்கமுடியும். இந்தப் பயனற்ற காரியத்தைக் கூட அந்தப் பழுத்தசனாதனி, மாளவியா செய்வதைவிடச்சாப்ரூக்கள் செய்வதுநல்லதுஎன்று நினைத்தோம். பத்திரிகைகளிலே, வேறோர் செய்திகண்டோம், “ஆம்! இதுவே மாளவியாவுக்கு ஏற்றவேலை” என்று திருப்தி பெற்றோம். என்னசெய்தி?

மாளவியா, புராணப்பிரியர், ஆரிய சிரேஷ்டர், சனாதனி! இலண்டன்வட்டமேஜைமாநாட்டுக்குச் சென்றபோது, கங்கைநீரும் களிமண்ணும் கையோடு கொண்டுசென்ற கனபாடியல்லவா அவர்!! அவர், தமதுபண்புக்கும் பயிற்சிக்கும்ஏற்ற காரியத்தைச் செய்யத்தொடங்கியுள்ளார். அலகாபாத்தில் மூன்று வாரங்களுக்கு ஒரு யக்ஞம்நடத்த ஏற்பாடாகி இருக்கிறதாம், அதைப்பண்டிதர் மாளவியா ஆரம்பித்துவைப்பார் என்று செய்தி வெளிவந்திருக்கிறது. இது அவருக்கு ஏற்றகாரியந்தான்! திருக்குளத்தருகே திருப்பாசுரம் படிப்பது, கோயிலிலே மணி அடிப்பது, கொட்டுமுழக்குடன் வலம்வருவது, யாகயோகாதிகள் செய்வதுபோன்ற காரியாதிகளிலே, இக்கனபாடி ஈடுபடுவதே, ஆளுக்கேற்ற வேலையாகப், பொருத்தமானதாக இருக்கும். அதைவிட்டு, அவர், அரசியல் நெருக்கடியைத்தீர்க்கச் சர்வகட்சி மாநாடு கூட்ட முயற்சிப்பது சரியில்லை என்று கருதினோம். வேலைமிகத்தாமதமாக நடப்பதால், சர்வகட்சி மாநாட்டை நடத்தப் போவதில்லை என்று இன்று ஓர்செய்தி வந்திருக்கிறது. மாளவியாஜீ, தமக்குரிய “தொழில்” இன்னதெனத் தெரிந்துகொண்டார் போலும்!!

## கஸ்தூரிபாய் அம்மையார் மறைவு.

காந்தியாரின் துணைவியார், கஸ்தூரிபாயம்மையார், சிலநாள் நலிவுற்றிருந்து காலமானார்கள், என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். பொதுவாழ்விலே ஈடுபடும் தலைவர்களுக்குத் துணைவியாராகவிருக்கும் நிலைபெறுபவருக்குத்தனியான சில மாண்புகள்தேவை. இலட்சியத்திற்காகப் பணிபுரியும் தலைவருக்கு அத்துணைவியர், ஆற்றவேண்டிய அன்புப்பணியின் திறமே அலாதியானது. கஸ்தூரிபாயம்மையார், காந்தியாரின் இலட்சிய விளக்காக விளங்கிவந்தார்கள். அவருடைய பொதுத் தொண்டிலே, தானும் பங்குகொண்டார்கள். அவருடைய சுகதுக்கங்களிலே, பங்குகொண்டு பணிபுரிந்தார்கள். அவர்களின் நோயைத் தீர்க்க எடுத்துக்கொண்ட முயற்சிகொஞ்சமல்ல! அபூர்வமான மருந்து, விமான மூலம் எடுத்துச்செல்லப்பட்டதாம் அவர் உயிரைக்காப்பாற்ற! இயற்கையின் போக்கைத்தடுப்பதற்கில்லை, கஸ்தூரிபாயம்மையார்மாண்டு போனார்கள். அவர் மறைவு, காந்தியாரின்உள்ளத்திலே பெரியதோர் அதிர்ச்சியைஉண்டாக்கியே தீரும், குடும்பத்திலே சோகக்கொந்தளிப்பை மூட்டிவிட்டிருக்கும். அவர்களுக்கு நமது அனுதாபம் உரித்தாகுக. நீண்டநாட்கள், உடனிருந்து பணிபுரிந்த உத்தமியை இழந்த காந்தியாருக்குக்,காலமும், இயற்கை நியதிகூறும் பாடமும், அளிக்கும் ஆறுதலோடு, நம்போன்றார் தரும் ஆறுதலும் கலந்து, அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை நீக்குமாக.

### மாணவர் மலர்.

அடுத்தஇதழிலே, குடந்தையில்நடந்த திராவிட மாணவர் மாநாட்டுச் சொற்பொழிவுகளும், திருவாரூர்த்தமிழ் மாணவர் மாநாட்டுச் சொற்பொழிவுகளும் கொண்டதொகுப்பு வெளிவரும்.

### தமிழ்க்கலை மாநாடு.

நாகர்கோயிலில் மார்ச்சுத்திங்கள் 10ம் நாளிலிருந்து 14ம்நாள்வரை தமிழ்க்கலை மாநாடு நடைபெறும். 12ம் நாளன்று, தோழர் C. N. அண்ணாத்துரை “கலையும் வாழ்வும்’ எனும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார். நகைச்சுவை அரசர் தோழர் N. S. கிருஷ்ணன் அவர்களும், T K. சகோதரர்களின் M. S. B. S. சபை நடிகராக இருந்த தோழர் நாராயணசாமி அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

———

நடிகர்

### நாராயணசாமிக்குப் பாராட்டு.

T. K. S. சகோதரர்களின் M. S. B. S. சபையிலிருந்து, விடுதலைபெற்றநடிகர், தன்னுணர்வுப்பற்றுமிகுந்த தோழர் D. V. நாராயணசாமி அவர்களைப் பாராட்டி ஈரோடு, முத்தமிழ் நுகர்வோர் கழகம், திராவிடர்கழகம் முதலியவற்றின் சார்பில், 18—2—44 மாலை, 6½மணிக்கு டவுன்ஸ்கூலில், திருப்பூர், நமது இயக்கத் தோழர் S. R. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் ஓர்கூட்டம் நடைபெற்றது. பத்துக்குமேற்பட்ட தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில்கலந்துகொண்டனர். நடிகர் இத்தனைநாள் புராணநாடகங்களில் நடித்ததை நிறுத்திக்கொண்டு இனிமேல், சமுதாய நாடகங்களில் நடிக்கப்போவதைப் பாராட்டித் தோழர்கள் கோபி, சுப்பண்ணு, S. S. ஆரோக்கியசாமி, புலியூர் P. முருகேசன் முத்தமிழ் நுகர்வோர் கழகத்தலைவர் P. ஷண்முகவேலாயுதம் முதலானோர்விரிவாகப் பேசினார்கள். ஏராளமானமக்கள்கூடி உற்சாகமாக நிகழ்ச்சிகளைக் கவனித்தனர். தோழர் D. V. நாராயணசாமிக்குத், திராவிடர் கழகத்தின்சார்பாக, ஓர் வெள்ளிக் கோப்பையும், M. K. குகநாதன் அவர்களால் ஓர் வெள்ளிக்கோப்பையும், E. V. K. செல்வம் ஓர் வெள்ளிமெடலும் மற்றும் ஒருதோழரால் நான்கு நூல்களும் பரிசாகஅன்புடன் வழங்கப்பட்டன. மலர்மாலைகளும் சூட்டப்பட்டன. தலைவர் S. R. சுப்ரமணியம் அவர்களும் தனது மகிழ்ச்சிக்கு அறிகுறியாக ரூ 25 நடிகருக்கு மனமுவந்தளித்துப், பாராட்டிப்பேசினார். பின்பு தோழர் D. V. நாராயணசாமிஎழுந்து, தனக்குஅளித்த இந்தப்பெருமைதானொரு சுயமரியாதைக்காரனாக இருப்பதுவேயன்றி நாடக நடிகன் என்ற காரணத்தால்அல்ல என்பதை எடுத்துக்கூறி, அனைவருக்கும் நன்றிகூறினார். கூட்டம் P. ஷண்முகவேலாயுதம் அவர்களின் முடிவுரையுடன், புராணநாடகங்கள் ஒழிக, சமுதாயநாடகங்கள் வாழ்க என்றஆரவாரத்தோடு முடிவுற்றது.

13—2—44 இதழின்
தொடர்ச்சி.

## திரு. வி. கலியாணசுந்தரனுருக்கு!

எகிப்திய நாகரிகம், சால்தீய (திராவிட) நாகரிகம், சீனநாகரிகங்களுக்கு முற்பட்டது ஆரியநாகரீகம் என்கிறார் திலகர். இவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா? இல்லை என்றால், இந்து மதத்தை எப்பொழுது வெறுத்தீர்கள்? "கிறிஸ்து சகாப்தம் ஆரம்பகாலத்திலேயே தமிழகத்தில் இருள் சூழ்ந்துகொண்டது. அதற்குக்காரணம் ஆரியர் ஆதிக்கம்" என்று கால்டுவெல் துரைமகனார் கூறுகிறார். (திராவிட நாகரிகத்திற்கு விரோதமாகவே ஆரியர்கள் சைவ வைணவ சமயத்தை உபயோகப்படுத்திக்கொண்டார்கள்" என்று கூறுகிறார், ரிச்சர்டு என்ற வரலாற்றாசிரியர். "இந்தியநாடு கீழ்நிலைக்குப்போன காரணம் பார்ப்பனர்களின் ஆதிக்கமே" என்று சாண்டர்ஸ் என்பார் "விதர் ஏஷியா" என்ற நூலில் வரைந்துள்ளார். இக்கருத்துகள் உங்களுக்கு உடன்பாடு இல்லையானால் தாங்கள் உண்மைத் தமிழராக இருந்திருந்தால், எதிரியின் பாசறையில் நின்று தமிழனிடத்தில் கலையுணர்ச்சி இல்லையென்ற பாணத்தை விட்டிருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காதே. கம்பஇராமாயணப்படிப்புத்தேவையென்கிறீர். அதில் சகோதரத்துரோகம் இனத்துரோகம், எதிரிக்குக் காட்டிக்கொடுத்தல் இவையான மதச்செயல்களைத்தான் கம்பன் சித்தரித்திருக்கிறான். விபீடணன் சுக்ரீவன், இராமன் போன்றார் உதாரணங்களே போதும். இவையனைத்தும் தமிழன் பண்புகள் அல்லவே. ஆகவே, இராமாயணத்தைத் தமிழன் நூலாகக் கூறும் தாங்கள் எப்படித் தமிழராகவிருக்க இயலும் என்பதையாவது தயைசெய்து உலகுக்கு இயம்புங்கள். விபீடணனை ஆழ்வாராகத்துதிப்பவன் எங்ஙனம் தமிழனாகவிருக்கமுடியும்? அதுவும் போகட்டும். "தொல்காப்பியக் காதலையும், வீரத்தையுந்தான் கம்பன் இராமாயணத்திலே புகுத்தினார், அதுதான் இராமாயணம். இது என்கருத்து" என்றுகூறினீர் அன்று. அந்தக்காதலையும், வீரத்தையும் தமிழன் விரித்தால் கேவலம், அவைவெறும் காமமாகவும், கோழைத்தனமாகவுமே முடியுமென்று திராவிடமகன் முடிவுகட்டிவிட்டான். தமிழன் பண்புகளுக்குக்கம்பன் கேடு தேடிவிட்டான். ஆரியப்பண்புகளைத் தமிழன் பண்புகளாக்கி இனத்துரோகம் செய்துவிட்டான் என்பதே உண்மைத் தமிழர் கருத்து. மறைந்திருந்து கொல்லும் வீரந்தான் தமிழன் வீரம்போலும்! மறைவிடத்தைத் தோத்தரிப்பதும், இளையானிடம் தன்காதலியின் அங்க அடையாளத்தை மூச்தோன் நவில்வதும் காதலியைகாட்டில் விடுவதுபோன்றதும் தான் காதல் போலும்! என்னே நீறு பூசிய நம்கூட்டத்தார் கூறும் காதல், வீரத்தின்சிறப்பு. தொலையட்டும், உம் முடிவின்படியே வைத்துக்கொண்டாலும் அக்கருத்தைப் படித்தகூட்டத்தாரிடம் தெரிவித்துக் கம்ப இராமாயணத்தில் எவ்விதத் தெய்வீகத்தன்மையும் கிடையாது' இன்னின்னது தமிழன் வீரம் காதல் செயல், இன்னது கோழைத்தனம், நீக்கவேண்டுவன நீக்கிக் கொள்வன கொள்க என்றாவது இதுவரையில் கூறியதுண்டா? இதுவரையில் ஒன்றும் கூறாமல் இந்தவருட ஆரம்பத்தில்தான் கம்ப இராமாயணத்தைக்குறித்து நீங்கள் புதுக்கருத்துகொண்டதின் காரணம் கம்பரசடோசை அருந்திய பயனா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

உங்களுடன் உடன்பிறந்த பிறவிக்குணம் ஒன்றுண்டு. வாழ்க்கைக்குரிய திட்டமுறைகள் காலத்திற்கேற்ப அவ்வப்போது அறிஞர்களால் வகுக்கப்படுவதும் அதைப் பொதுமக்கள் ஒப்பி நடைமுறையில் நடத்துவதும் உலக நியதியும் நேர்மையுமாக விருக்கின்றன, ஆனால் "அவைகள் அத்தனையும் எமது முந்தையோர்

## நீலன் நிருபம்!

கண்டமுறை" என்றுகூறி வீண் கித்தாப்பு அடையும் பிறவிக்குணந்தான் உங்களுடையது. சமதர்மந்தான் உலகில் பசிப்பிணியை ஒழிப்பது என்பது புது உலகத்திட்டம் என்றால் மணிமேகலையின் அட்சய பாத்திரநாள் திரும்பவரவேண்டுமென்று யாரோ ஒருவர் பொங்கல் நாளன்று சென்னையில் கூறினாரமே அதுபோல, "எங்கள் நக்கீரரே சமதர்மியாக இருந்தார். அவர்காலம் லெனின், மார்க்ஸ் வாழ்ந்ததற்கு முந்தி" என்று பேசுகிறீர்! ஒருவார்த்தை உங்களைக்கேட்கிறேன். கடைச்சங்க காலந்தொடங்கி இன்றுவரை காலக்கணக்கெடுங்கள். அதே போழ்தில் "கேபிடல்" நூல் தோன்றியதிலிருந்து சோவியத் ஆட்சிநிறுவியவரையிலுள்ள கால அளவையும் ஒப்பிடுங்கள். மடுவுக்கும் மலைக்குமுள்ள காலவித்தியாசம் இருப்பதை உங்கள் அறிவு சொல்லும். குறுகியகாலத்தில் மார்க்ஸ் சமதர்மம் நிலமண்டலத்தில் சமைந்தது. ஆனால் பல நூற்றாண்டுகள் ஆகியும் நக்கீரன் சமதர்மம் தமிழகத்தில் ஒரு குக்கிராமத்தைக் கூடத் தொட்டுப்பார்க்கவில்லை என்பது மட்டும் உங்கள் நெஞ்சில் இருக்கட்டும். சங்க இலக்கியம் படிக்கும் பண்டிதக்கூட்டத்தில் எத்தனை சமதர்மிகள் காணப்படுகிறார்கள். நக்கீரனைப்போற்றும்சமதர்மிகள் எத்தனை சமதர்ம மகாநாடுகளைக் கூட்டிப் பண்டைப் பண்பினைப் போற்றியிருக்கிறார்கள்? மருந்துக்கேனும் உண்டா? அதற்கு மாறாக நக்கீரர்பரம்பரைகள், சமதர்ம நெறிக்குஉழைக்கும் சுயமரியாதைத் தமிழனைக் காய்கிறார்கள். நீங்கள் கூடத்தான் எங்களை அறிவிலி என்கிறீர்கள். துறையூரில் தடைதட்டினீர்கள். பூவாளூரில் "புஸ்" என்றீர்கள். காரியம் பூச்சியம்தான். இதெல்லாம் பார்த்தால் நீர் ஒரு சமதர்மியா என்றுகூட நான் சந்தேகிக்கிறேன். நக்கீரன் சமதர்மமே, ரஷிய சமதர்மமோ, எப்படியேனும் ஆகட்டும். நீர் உண்மையில் சமதர்மத்தில் நம்பிக்கைகொண்டவராகவிருந்திருந்தால் தமிழகத்தில் சமதர்மப்போராட்டத்தைத் துவக்கிய தமிழர் தலைவரோடு தோள்கோர்த்து நின்றிருப்பீரே! அத்திட்டத்தின்மூலாதாரமாக ஆரம்பிக்கப்பட்ட ஜமீந்தார் அல்லாதார் மகாநாடு, கடன்மறுப்போர் மகாநாடு, தாசர் ஒழிப்புவேலை, லேவாதேவிக்காரர் அழிவுவேலை இவைகளில் ஒத்துழைத்தாவது இருந்திருக்கவேண்டாமோ? தமிழன் என்றீர், தமிழன் பண்புகளைத் தங்கள் திருமேனிகள் செய்வதுமில்லை, உங்கள் ஆச்சாரிவர்க்கமும் கவனிப்பதுமில்லை. ஆனால், உம்உறவு அப்பக்கம். காதலைப்போற்று, வீரத்தோடு திகழ், பண்டைத் தமிழனாகவாழ், என்றுகூறும்சுயமரியாதைக்காரன்பக்கம் பகை, அவனைக்கண்டால் உமக்கு வேப்பங்காய்தான். இதிலிருந்து சில உண்மைகள் புலனாகின்றன. உமது சமதர்மக்கொள்கையால், உமது தமிழன் பண்பில் எங்கேனும் கோணல், பொத்தல் இருந்திருக்கவேண்டும். அல்லது உமது வாழ்க்கையின் திட்டமே உள்ளொன்று புறம்பொன்றாயிருக்கவேண்டும் என்பதுதான்.

'காரைக்குடிமுதலிய இடங்களில்நான் சென்றபோது தமிழர்களிடையே ஒரு புத்துணர்ச்சியை—மறுமலர்ச்சியைக் கண்டேன்என்று கூறினீரே, அது உங்கள் கோஷ்டியாரின், காப்பியடிக்கும் தமிழ்ப் பண்டிதர்களின் தொண்டினலா அல்லது தமிழிசை இயக்கம், சுயமரியாதை இயக்கம் இவைகளின் தளராஉழைப்பினலா என்பதற்கு உம்துமனமே சான்றுபகரும். சென்னைத்தமிழிசை மாநாட்டுக்குச்சென்றும் ஒருவார்த்தைகூடப் பேசாததோடு அமையாது அம்மகாநாட்டுக்குச் சுயமரியாதைக்காரர்கள் எதிரிகள் என்றுகூட பிரசாரஞ்செய்தீராமே, அதுதான் தமிழ்க் கலைத்தொண்டா? தமிழர்தோலில் பார்ப்பன உணர்ச்சியா? சற்றுக்கடுமையான உச்சரிப்பில் சொல்லவேண்டுமானால் தாங்கள் ஒரு கலைஞரா என்றுகூட ஐயப்பாடு உண்டாகிறது! சமூகத்தை தமீறி எழுந்தவனே கலைஞன் ஆவான் என்பது அறிஞர்கருத்து. அக்கலைஞனுக்கு அறிவுப்புலமையல்லவா வேண்டும். நீர் மொழிப்புலவராகஇருக்கலாம். சமயப்புலவராகவுமிருக்கலாம். அத

(4ம் பக்கம் பார்க்க)

# நீலன் நிருபம்!

3-ம் பக்கத்தொடர்ச்சி.

ஞல் கலைஞனுகஆகிவிடமுடியாது. இந்நிலையில்எங்களைக் காய்கிறீர். அன்று முடிவுரைகூறிய ஒருவர் கூற்றுப்படி தாங்கள் ஒருவிசித்திரப்பிராணி! என்றுதான்எண்ணவேண்டியிருக்கிறது. இல்லையாஞல் உங்கள் மதஆச்சாரத்துக்கும் காதல் பிரசாரத்திற்கும் சம்பந்தமிருக்குமா? சங்ககாலச்சமதர்மத்துக்கும் காந்தியத்துக்கும் ரஷியசமதர்மத்துக்கும் துளியாகிலும் தொடர்பாவது இருக்குமா? ஏகம் ஒரே மிச்சர்தான் உங்கள் வாழ்விலே. Naturalistic Conception Of Life and the Universe என்றஇயற்கையோடியைந்தவாழ்வைச் சீனநாட்டுப்பெரியோன் ஹூஷிக் மக்களுக்குச் சொன்ஞர். அதன்காரியமாக அவர்பாமரர்களிடையே நாத்திகப்பட்டமும் பெற்ருர். ஆஞல் நீரும் இயற்கைவாழ்வுஎன்று கூப்பாடுபோடுகிறீர். ஆஞல் உங்களுக்குப்பட்டம் என்னதெரியுமா? விப்பிரிடத்திலே ஸ்ரீ வி. க. தமிழ்ப் பெரியார் என்று; “பாரததேவி”யிலே ஆதியந்தமில்லாத தமிழ், வி. க. பிரசங்கம் என்று; மதவாதிகளிடத்தில் சைவமணி என்று. நீங்கள்எங்கே? உங்கள்கொள்கை எங்கே? அறிவாளி ஹூஹிக்எங்கே? அன்ஞரது உன்னத உலகப்படப்பிடிப்பு எங்கே? சுயமரியாதைக்காரன் உங்களையும் அறிவான்; உங்கள் அவதாரங்களையும் அலசுவான்.

தோழரே! என் இந்தக்கோலம். எத்தனைநாளைக்குஇந்நாடகம் செலாவணியாகுமென்பது உங்கள் நினைவு. வேண்டாம், தாயின்பண்பைச் சேய்அறியாதா? இன்னமும் காலம்அகாலமாகவில்லை. என்னமோ இன்னமும் சுயமரியாதைத்தாயாகிய நீர் சோரம் (தமிழன் இனத்துக்குச் சதிசெய்யும் கூட்டத்தில் உறைதல்) போய்க்கொண்டேயிருக்கிறீர். இனியாகிலும் உம்நிலைஉணர்ந்து உம்கணவனை நாடிவாரும். உம்மைக் கடியாதுகனிந்து உம்தலைவனும் வரவேற்பார். ஒழுக்கம் தவறியபெண்டிர் அக்காலத்தில் குமரிநீர் ஆடச்செல்வதுபோல உம்மை எம்தந்தை எந்நீராட்டாலும் செய்யார். “ஐயகோ! கிழட்டுப் பருவமும் தட்டிப்போச்சே, இனிஎன்ஞல் யாதுபயன்?” என்றுமனச் சோர்வு அடையாதீர். “சேய்க்கு மாருக, தலைவனுக்கு எதிராக வினைகள்பல ஆற்றினேமே, இப்பொழுது எப்படி அவர்களிடம்சேர மனம் இடங்கொடுக்கும்” என்றும் ஆயாசப்படவும்தேவையில்லை. மனிதவர்க்கம்நிமிடத் திற்கு நிமிடம் தன்னையறியாது பிழைபலசெய்து கொண்டேஇருப்பது இயல்பு. நீர் சேயிடத்தில் இற்றைப்பொழுதில் இருந்திருந்தால், கதகளிநடனமாது ருக்குமணிதேவியார் “சங்கீதத்திலும் பாஷையை புகுத்துவது அசம்பாவிதம்; நல்லகாலமாக அது இங்கு (அடையாறுகலா க்ஷேத்திரம்) தலைகாட்டவில்லை” யென்றுபேசியதைச் சகித்திருப்பீரா?

ஒரு சந்திரசேகர அய்யர், ஒரு சுப்பராவ், ஒரு பல்லடம், ஒரு அரியக்குடி, ஒரு காயகசிகாமணி தமிழகத்தில் தமிழிசைக்கு எதிராக தீர்மானம்போட, ஒத்துத்தாளம் போட்டிருப்பீரா? “ராஜாசர். மிகுநிதிபடைத்தவர். ஆஞல் அதைக் கொண்டு அவர் அரசியலில் செல்வாக்குப் பெற இயலாததால். தமிழிசை இயக்கத்தை ஆரம்பித்தார். கர்ஞடக சங்கீதம் என்ருல் சமஸ்கிருதம், களிதெலுங்கு இவைகளில் பாடுவதுதான்என்று இதுவரை தமிழ்நாட்டில் கருதப்பட்டுவந்தது. இப்பொழுது இந்த இயக்கத்தார் தமிழ்ப் பாட்டுத்தான் தமிழ்நாட்டில்பாடவேண்டுமென்கிருர்கள். ஆஞல் “இந்து” பத்திரிகை அதை எதிர்ப்பதால் பிளவு அதிகரித்துக்கொண்டிருக்கிறது.” என்று பம்பாய் வாரப்பத்திரிகையான போரம் (Forum) எழுதுவதெல்லாம் உண்மையென்ருவது கூறியிருப்பீரா? “சரித்திரப் படியான கலப்பையும், அதன் விளைவான அபிவிருத்தியையும் மறுக்கமுயல்வதே தமிழிசைக்கிளர்ச்சியாகும், இசையாலும், சாதியாலும் தனிமைகொண்டாடவிரும்புவோர் உணவிலுங்கூட அவ்வாறு ஆரம்பித்தால் (நல்லவேளை, ஆச்சாரிகூறியதுபோல பார்பர் ஷாப்பைத் தொடவில்லை) ஜிலேபி, சட்னிவேண்டாமென்பாரோ?” என்று பிரிபிரஸ் ஜெர்னல் ஆசிரியர் K. சீனிவாசன் என்ற ஆரியர் திராவிடநாட்டிலுள்ள ரானடே ஆலில் கூறியதற்கு ஒப்பம்வைத்திருப்பீரா? “அக்காலத்தில் சாதி, மொழிபிரிவினைகிடையாது. (தேவாரத்தில்ஆரியன் கண்டாய்; தமிழன்கண்டாய்என்றுபாடப்பட்டிருக்கிறது” என்று ஆரியத்தை ஆதரிக்கும் சைவநூலை ஒருசங்கு சுப்பிரமணியன் துணைக்கழைத்துப்பேசிய சம்பவத்துக்கு நீங்கள் “ஆமாம்” போட்டிருக்க முடியுமா? விக்ரமாதித்தன் யார்? யாருக்குத்தலைவன்? என்பது சரியாகத்தெரியவில்லை. ஏதோ சைனமதத்தினன்,உச்சைனியில் ஆண்டான் என்றுதெரிகிறது. எனினும் சரியானவரலாறு தெரியாத அவனது ஆட்சியை நாம் (ஆரியர்) வரவேற்கிருேம் என்ருல் அது இந்தியர்கள் சுதந்திரதாகமுடையவர்கள் என்பதைக் குறிக்கிறது” என்று ஒரு நீலகண்டசாஸ்திரி தமிழகத்தில் பேசியிருக்கமுடியுமா?

சமீபத்தில் திருவையாற்றில் நடைபெற்ற தியாகப்பிர்ம ஆராதனை உற்சவத்தில் எங்கும் பார்ப்பனசோதிதாஞம். பேருக்குக்கூட ஒரு தமிழ்இசைவாணன் அக்கச்சேரியில் இடம்பெறவில்லையாம். தப்பித்தவறிச் சென்றிருந்த இரண்டொரு இளந்தமிழ் வித்வான்களுக்கு இடமில்லையென்று கண்டித்துக் கூறப்பட்டதாம். பாடியபார்ப்பன இசைவாணர்களில் ஓரிருவர் ஏதோநிலைமையைக்கருதி இடையில் தமிழ்ப்பாட்டுப் பாடிவிட்டார்களாம் அவ்வளவுதான். தியாகய்யர் விழாவில் தமிழுக்கு வேலையென்ன? என்றஆரவாரம் கிளம்பிற்ரும். முகத்தில்முளைத்தவரிடமிருந்து. அன்பரே, இனியேனும் சுயமரியாதைக்காரனென்ற சேயோடு வாழமுயற்சியும், தாயின்நிலையைக்கண்டு சேய் வருந்துகிறது. சேயோதாய்க்குக் கைக்குஉயர்ந்த பிள்ளையாகிவிட்டது. இனி, நீர் பிறந்தவிழாவன்று சென்னையில்கூறியதுபோலஉம்மைநோக்கிச் சேய் வராது. தந்தைசொல்மிக்க மந்திரமில்லையென்ற மொழியையே கடைப்பிடித்துவிட்டது. ஆகையால் நீர்தான் சேயை நாடிச்செல்லவேண்டும். என்னமோஎனக்குப்பட்டதைச் சொன்னேன். அப்புறம் உம்தலையெழுத்து(?) நான் என்னசெய்யட்டும். இங்ஙனம்,

அன்புமறவா நீலன்.

## சிதம்பரம் பச்சையப்பன் பள்ளியில் தமிழ் வெற்றி.

இந்நகர் உயர்நிலைப்பள்ளி 93 ஆண்டுகளுக்குமுன் துவக்கி பள்ளிவிழாக்கள் வரும்போதெல்லாம் வடமொழியில் கடவுள்துதி நடத்திவந்ததைத் தமிழுணர்வுடையமாணவர்கள் கூடிப்பேசித்தலைமை ஆசிரியர் திரு. S. இராமச்சந்திர அய்யரவர்களிடம் தமிழில் வணக்கம் பாடமுதலில் அனுமதிக்குமாறுசிலவாரங்கள் முன் கோரினர். இதற்குப் பலபயமுறுத்தல்களும்—முயற்சியில் நழுவும்படி பலவித சிபார்சுகளும், மாணவர்களுக்குள் பிளவு உண்டாகும்படி பலமுயற்சிகளும் வடமொழிப்பற்றுடைய பலதரத்தினராலும் நடத்தப்பட்டதால் தலைமைஆசிரியர் சிலதினங்கள்பொறுத்து முடிவுசெய்து சொல்வதாகத்தெரிவித்தார். தங்கள்கோருதலை இலட்சியம்செய்யாது மறுக்கவே தலைமைஆசிரியர் அவ்வாறு காலந்தாழ்த்துகிருர்கள்எனக்கண்டு வருத்தத்தின்விளைவாகஙகரிலுள்ள எண்ணற்ற சுவர்களிலெல்லாம் வடமொழிஒழிக—பள்ளியில் ஆரியஆதிக்கம் ஒடுங்க என்றமாதிரியெல்லாம் எழுதிஅடிக்கடி அவ்விதஒலிமுழக்கமும் செய்துவந்தனர். இதைக்கண்டபின் அத்தலைமை ஆசிரியர் தமிழில் வணக்கம். பாடலாம்என அனுமதித்துவிட்டாராம். ஆயினும் அதைஉறுதியாய் நம்பாதிருந்த மாணவர்களுக்குச் சென்ற 19—2—43 மாலை ஷை பள்ளியின் ஆண்டுவிழாவில் ஷை பள்ளிபழைய மாணவரான கடலூர், திரு. சக்ரபாணி ஐயங்காரவர்கள் தலைமையில் முதன்முதலில் தமிழ்மொழிப் பாட்டுகளே வணக்கமாகப்பாடப்பட்டனஎனக்கண்டு பெருமகிழ்ச்சிகொண்டனர். இதுவே தமிழ்மாணவர் கூட்டுறவு முயற்சியின் முதல்வெற்றியாக நகரெங்கும் பேசப்படுகிறது.

# பார்வதி பி, ஏ;

1ம் பக்கத் தொடர்ச்சி.

வமணியும் என்னை மறந்துவிடுவார்களென்றும், திலகாயோசனை கூறினாள். "என்னை மறந்துவிடுவதற்குப்பதிலாகக், கோபத்தால், ஏதேனும் தாறுமாறாகச் செய்தால் என்னசெய்வது?" என்று நான்கேட்டேன். "ஒன்றும்செய்யமாட்டார்கள். தாங்கள்விரும்பும்பெண்கிடைக்காமற்போனால், பகலிலே பெருமூச்செறிவதும் இரவிலே தலையணையைக் கண்ணீரால்நனைப்பதும், இருமலும் காய்ச்சலும் வரப்பெற்று இளைத்துவிடுவதுமாக, ஆண்களிலே ஒருரகம்உண்டு! மற்றோர்விதம், சிச்சீ! இந்தப்பழம்புளிக்கும்! என்று கூறுவது. மற்றுமோர்ரகம்உண்டு, காரியம்பலிக்காது என்றுதெரிந்தால், கல்வீசுவது, கண்டபடி ஏசுவது, கத்தி தீட்டுவது, முதலியகாரியங்களைச் செய்வது. முதல் ரகத்தைச்சேர்ந்தவர்கள், ஏடுபடிக்கும் மாணவனும், நாடுஅறியா ஆசிரியனும். எனவே அவர்கள், உன்னை அடியோடுமறந்துவிடத்தான் முயற்சிப்பார்களேயொழிய மல்லுக்கு நிற்கமாட்டார்கள்" என்று திலகாகூறினாள். எப்படித்தான், ஆண்களை இப்படி எடைபோட்டாளோ தெரியவில்லை அவள்! ஏதேதோபேசி, எப்படி எப்படியெல்லாமோ வாதாடிக்கடைசியில், சித்திரத்திலே சிந்தையைப் புதைத்திருந்த, வாலிபனிடம், என்னைக்கொண்டுபோய் ஒரு நாள்நிறுத்தினாள். அவன்ஏதோஒருஆபூர்வ இயற்கைக்காட்சியைச் சித்தரிப்பதிலே, ஈடுபட்டிருந்தான். வர்ணக்கோப்பைகளும், சித்திரம் வரையப்பெற்றிருந்த திரையும், தீட்டுகோலும்தவிர அவனுக்கு உலகிலே வேறோர் பொருள்இருக்கும் என்றநினைவும் இல்லையோஎன்று சந்தேகிக்கும்படி இருந்தது. அவன் அவ்வளவு மூழ்கிக்கிடந்தான், சித்திரக்கலையின் இன்பத்திலே. "இரு, வருகிறேன்" என்று, இரகசியமாக, என்னிடம் கூறிவிட்டுத் திலகா வெளியேசென்றாள். நான், அங்கு இருந்தசித்திரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். என்மனம், புதியதோர் எழுச்சிபெற்றது. முகிலைக்கிழித்துக் கொண்டுவெளிக்கிளம்பும் முழுமதியும், அலையைக் கிழித்துக்கொண்டுசெல்லும் மரக்கலமும்அழகுறத்தீட்டப்பட்ட ஓர்சித்திரம்! முல்லைப்புதருகே படமெடுத்து ஒருநாகம் ஆடுவதுபோன்றகாட்சி! ஆற்றோரத்திலே, கண்உறங்கும்மானும், அதற்குக் காவலாகநிற்கும்மானும், கொண்ட காட்சி! அலர்ந்தரோஜாவை, மலர்ந்த முகத்துடன்விளங்கும் வனிதையொருவள்பறிக்கும்காட்சி! மலையும் அதன் ஆரமாகவிளங்கும் அருவியும் ஒருபுறம் தீட்டப்பட்டிருந்ததைக் கண்டேன், அத்தகைய இடத்திலே உலவுவதுபோன்றே என்உள்ளம்பூரித்தது. ஒன்றிற்கொன்று துளியும் குறைவுபடாத வேலைப்பாடமைந்த அந்தச் சித்திரங்களைக்கண்டு, சிந்தை நெகிழ்ந்திருந்தேன். திடீரென, ஓவியக்காரனை உற்றுநோக்கினேன். கண்களிலே ஓர்விதமான புதுஒளியுடன், அவன் என்னைநோக்கியபடி இருக்கக் கண்டேன், திகைத்தேன், கண்களின் மொழி எனக்கு விளங்கிவிட்டது.

"வந்துவிட்டாயா, வனிதாமணி! வராமலிருக்கமுடியுமா?" என்று, ஓவியக்காரன்கேட்டான், என்னைப்பார்த்தபடி!

"யாரைக்கேட்கிறீர்கள்?" என்றுநான் பயந்துகேட்டேன்.

"என் இன்பக்கனவை, இருதய கீதத்தை, ஓவியஉயிரை," என்று, அவன், சம்பந்தமில்லாத பேச்சுடன், என்னை நெருங்கத்தொடங்கினான். அவனுடைய நோக்கம் எனக்குத்தெரிந்துவிட்டது! ஓடிவிடவேண்டியதுதான்அந்தஅறையை விட்டு, இல்லையேல்,.........எங்கே ஓடினேன்! ஓடிவிடவேண்டும், என்றுதான் நினைத்தேன், ஆனால் ஏனோ, என்னையுமறியாமல், நானும், அவனைநோக்கி நடக்கலானேன்! ஒருவிதமான மயக்கம்!! கண்கள் மூடிக்கொண்டன!!! புளகாங்கிதமடைந்தேன். நறுமணம், இன்சுவை, குளிர்ந்ததென்றல், இனியகீதம், யாவும் ஒருங்கேபெற்றுஅனுபவித்தேன். மெள்ள மெள்ள என்கண்கள் திறந்தன, அவன், என்னைத் தழுவிக்கொண்டிருக்கக் கண்டேன், என்அதரம் ஒருதேன் குவளையிலே இருப்பதுபோலிருந்தது, அவன் ஒன்றன்மேல் ஒன்றாகத்தந்துகொண்டிருந்த முத்தங்களினால்!

[தொடரும்]

## திருச்சிஜில்லா ஜஸ்டிஸ் மாநாடு.

20—2—44, திருச்சிஜில்லா ஜஸ்டிஸ் மாநாடு, முனிசிபல், பப்ளிக்ஹாலில், தோழர் T. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெரியார், மாநாட்டைத்திறந்துவைத்தார். தோழர் C. N. அண்ணாத்துரை, கொடிஏற்றுவிழாவாற்றினார். தோழர் அருணாசலம் செட்டியாரவர்கள் வரவேற்புரைநிகழ்த்தினார். மாநாட்டில், தோழர்கள் வேதாச்சலம், C. P. சின்னராஜு, (M. S. B. S. சபை நடிகராகஇருந்த) நாராயணசாமி ஆகியோர் பேசினர். அன்றுமாலை, டவுன் ஹால் மைதானத்தில், தோழர் T. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், பெரியார், C. P. சின்னராஜ், C. N. அண்ணாத்துரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## ஸ்டாலின் முழக்கம்.

"ஜெர்மனியரிடம் சிக்கிக்கிடந்த சோவியத்பிரதேசத்திலே முக்கால்வாசிப் பாகத்தைச் சிவப்புப்பட்டாளம் மீட்டுவிட்டது. லெனின்கிராட் முற்றுகையை முறியடித்துவிட்டது. ரஷியா ஒன்றுமட்டுமே எதிர்த்துப்போராடும் இந்தநிலையிலேயே, ஜெர்மனியால் தாக்குப்பிடிக்க முடியவில்லைஎன்றால், நேசநாடுகள்இரண்டாம் போர்முனை துவக்கிவிட்டால், ஜெர்மனியின் கதிஎன்னாகும்!" என்று சோவியத்தலைவர் ஸ்டாலின், சிவப்புப் பட்டாளத்தின் பாராட்டுவைபவத்தின் போது, கூறினார்.

27—2—44 சென்னை வி. பி. ஹாலில்
நகைச்சுவை அரசர்,
**என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்**
தலைமையில்

# ★ சந்திரோதயம் ★

**விருந்திலே புதிய சுவை!**
T. K. சகோதரர்களின் M. S. B. S. சபையிலிருந்துவந்த தோழர்
**D. V. நாராயணசாமி அவர்கள்,**
கதாநாயகனாக நடிக்கிறார்!!
**பெரியார் வருகிறார்!**
மற்றொன்று!
தோழர் S. குருசாமி-குஞ்சிதம் அவர்களின் திருக்குமாரி,
**பேபி ரஷ்யா, நடனமும் நடைபெறும்.**

நாடகக்கலை அபிவிருத்தி மாநாடு, ஈரோடு.

# தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் சொற்பொழிவு.

"வாழ்க திராவிடம்"

"வாழ்க நற்றமிழர்"

"வாழ்க இயல், இசை, நாடகத் தமிழ்"

அன்புமிக்க தலைவர் அவர்களே, C. N. அண்ணாதுரை அவர்களே, இங்கு குழுமியிருக்கும் ஆர்வமிக்க நாடகாபிமானிகளே, உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கம் உரியதாகுக. முதன் முதலில் இம்மாநாட்டை ஈரோட்டில் கூட்டவிருப்பதாகத் தோழர் T. N. சிவதானு அவர்கள் என்னிடம் சொன்னார். அவர் என்னுடைய நன்கொடையையும் விரும்பினார். நான் அதுபோது அவரை, நடக்கவிருக்கும் மாநாடு அபிவிருத்தி என்ற பெயரால் மேலும், மேலும் மக்கள் அறிவைப் பாழ்படுத்தக்கூடிய புராண, இதிகாச நாடகங்களையே நடத்திக்கொண்டு போகவும், இந்தஉதவி செய்யுங்கள், அந்த உதவி செய்யுங்கள் என்று சர்க்காரைக் கெஞ்சுவதாகவும் இருக்குமோ என்றுயான் ஐயுறுகிறேன். அங்ஙனம் இருக்குமாயின் நான், அம்மாநாட்டில் கலந்துகொள்ளவும் முடியாது, யாதொரு நன்கொடையும் அளிக்கமுடியாது என்று சொன்னேன். அதற்கு நண்பர் சிவதானு அவர்கள், நமது மதிப்பிற்குரிய நண்பர்கள் C. N. அண்ணாத்துரை M. A; திருச்சி K. A. P. விஸ்வநாதன், பொன்னம்பலனார் ஆகியோர் மாநாட்டில் பங்கெடுத்துக்கொள்ளுகிறார்கள். நமது பகுத்தறிவு இயக்கத்திற்கு விரோதமான நடவடிக்கைகள் ஒன்றும் நடைபெறாது என்று உறுதிகூறியதின்மேலும், இம்மாநாட்டில் கலந்து புராணக்குப்பைகளிலேயே உழன்று மக்களின் பகுத்தறிவைப் பாழ்செய்துவரும் நாடகக்கம்பெனிகளை இனியாவது சமூக சீர்திருத்தம், பொருளாதார சீர்திருத்தம், திராவிட இனப்பற்று, வர்க்கப்பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஏற்படும்படியான நாடகங்களை நடத்தி நடிகர்களும், நாடகக்கம்பெனிகளும் மக்களுக்குத் தொண்டுசெய்ய ஏன் முயற்சி செய்யக்கூடாது என்ற பெருநோக்கத்தோடும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளத் தீர்மானித்து நன்கொடையும் அளித்தேன். மாநாடு கூடுவதற்குமுன்பே நண்பர் சிவதானு அவர்களைக் கூட்டுக் காரியதரிசி என்ற முறையிலே எனக்கு எழுதிய ஒருகடிதத்தில் "நமதுமதிப்பிற்குரிய தோழர்கள் மாநாடு நடக்காது என்று துர்ப்பிரசாரம் செய்கிறார்கள். மாநாடு கண்டிப்பாய் நடைபெறும்" என்று எழுதியது எனக்குவியப்பைத்தந்தது. மாநாடு நடத்தவொட்டாமல் நமது தோழர்கள் ஏன் துர்ப்பிரசாரம் செய்கிறார்கள் என்றுநான் ஆச்சரியப்பட்டேன். அம்மாநாட்டின் காரியதரிசிக்கு மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றுமாறு நான் ஓர் தீர்மானம் அனுப்பிவைத்தேன். அத்தீர்மானத்தைமாநாட்டில்பிரேரேபித்து அதைப் பற்றிச்சிலவார்த்தைகள் சொல்லஅனுமதி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தேன். என்னுடைய தீர்மானத்தை வரவேற்புக் கமிட்டியில் சமர்ப்பித்துவிட்டதாகக் காரியதரிசியிடமிருந்து எனக்குஒரு கடிதம் வந்தது. ஆனால் தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டதா? மாநாட்டில் அத்தீர்மானம் கொண்டுவாப்படுமா என்பதைப்பற்றிய குறிப்பொன்றும் காரியதரிசியின் கடிதத்தில் இல்லை. தீர்மானம் கீழ்க்கண்டவாறு:—

"தற்போது நாடகக்கம்பெனிகளிலும், தளிப்பட்ட நாடகங்களிலும் புராணசம் மந்தமான மூடநம்பிக்கைகளையே அடிப்படையாகக் கொண்ட நாடகங்களே மலிந்து மக்கள் அறிவை பாழ்படுத்திவருகின்றன. இம்முறை மாறிப்பகுத்தறிவை ஊட்டும்படியான சமூகசீர்திருத்த நாடகங்கள், ஜாதிபேத ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்புப் பெண்மக்கள் காதல் மணம், கலப்புமணம், விதவைமணம், மக்கள் பகுத்தறிவு வளர்ச்சி முதலியவைகளை, நடத்தவேண்டுமென்று நடிகர்களையும், நாடகக் கம்பெனிகளையும் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. இத்தகைய சீர்திருத்த நாடகங்களுக்கு மக்கள் ஆதரவு கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறது"

பெரியாரின் புரட்சிக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட முத்தமிழ் நுகர்வோர் சங்கத்தின் சார்பாக மாநாட்டுக்கு அனுப்பிய தீர்மானங்களையும்யான் கண்ணுற்றேன். அவையனைத்தும் என் தீர்மானத்தின் கருத்துகள்தாம் என்பது வெள்ளிடைமலை, தலைவர் சர். சண்முகம் அவர்கள்புராணங்களை எரிப்பதைத்தவறு என்றும், புராணங்களில் நல்லவையும்கலையும் இருக்கிறது, புளுகுகளும் பொய்யுரையும்இருக்கிறது என்று சொன்னார்கள்.

நாங்கள் அவரைப்போன்ற அறிவாளிகளைக்கேட்பது என்னவென்றால் உண்மையான கலைஎது, பொய்உரை எது என்பிரித்து நிர்ணயம்செய்து இதுதமிழன்கலை, இது அறிவிக்குப்பொருத்தமானது, இதுபொய்யுரை அறிவுக்குப் பொருத்தமானது அல்லஎன்று பாகுபாடு செய்ய ஒருகமிட்டியை ஏற்படுத்தித் தீர்மானம்செய்ய நாங்கள் சம்மதிக்கிறோம். ஆனால் கலைஎன்பதற்காக எங்களைச்சூத்திரன்என்று இழிவுசெய்யும் எந்தநூலையும் எங்கள் கலையென்பதாக நாங்கள் ஒப்புக்கொள்ள்மாட்டோம். சிலபுஸ்தகங்களை எரிப்பதால் உங்கள்நோக்கம் நிறைவேறுமா என்று.கேட்கிறார்தலைவர். நாங்கள் சொல்லுகிறோம் அந்நூலைஎரித்தால்தான் அதில்உள்ள அறிவுக்குப்பொருந்தாத ஆபாசங்கள் மக்களுக்குத்தெரியும். எங்கள் அதிருப்தியைக்காட்டவும், அது ஒருசின்னம்என்று. காங்கிரஸ்காரர்கள் அந்நியதுணியை உடுத்தக்கூடாது வாங்கக்கூடாது என்பதற்காக அந்நியதுணிக் குவியல்களை எரித்தார்களல்லவா? எதற்காக? அதிருப்தியைக்காட்ட, மக்கள் கவனத்தைக்கவர. அதுபோலவே நாங்களும் எங்களை, எங்கள் சமூகத்தை இழிவு செய்யும் எந்தநூலையும்எரிக்கத்தான்போகிறோம். தலைவர் அவர்கள்ஒருதலைப்பட்சமாக அபிப்பிராயம்கொள்ளாமல் நடுநிலையுடன் யோசித்துப்பார்க்கட்டும். ஒவ்வொருநூலும் கலைபாகம்எது, பொய்யும் புளுகும் எதுஎன்பதை நிர்ணயம்செய்யக், குறிப்பு இராமாயணமும், பெரியபுராணத்தைப் பொறுத்தமட்டிலாவது ஏற்பாடுசெய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கு இம்மாநாட்டை கூட்டிய அன்பர்கள் T. K. S. சகோதரர்கள் 1931-1932 ஆண்டுகளில் சமூக சீர்திருத்த நாடகங்களைத்தான் நடத்திவந்தார்கள் அப்பொழுது மக்கள் ஆதரவு கம்மி. ஆனால் அவர்கள் நவாப்இராஜமாணிக்கம் கம்பெனி இராமாயணம், கிருஷ்ணலீலாபோன்ற நாடகங்களை நடத்திப்பெருத்தலாபம்சம்பாதிப்பதைப் பார்த்து T. K. S. சகோதரர்களும் புராணநாடகங்களை நடத்தஆரம்பித்து பெருத்தலாபமடைந்தார்கள். ஆனால் 10 வருடத்திற்கப்புறம் இப்பொழுது சீர்திருத்தநாடகங்களுக்கு நல்லஆதரவு இருக்கிறது என்பது தோழர் அண்ணாத்துரை நடத்தும் "சந்திரோதயநாடகத்திற்கு ஈரோட்டில் ரூ. 4000. ஒருநாடகத்திற்கு வசூலாயிற்று என்பதுமூலம் விளங்கவில்லையா? தோழர் நகைச்சுவை அரசன் N. S. கிருஷ்ணன் அவர்கள் நடத்தும் சமூகசீர்திருத்த கதையாகிய "கிந்தனார்" சரித்திரத்துக்குக் கோட்டையூரில் கூடியபதினாயிரக்கணக்கான மக்கள் ஆதரவுகொடுத்ததையும் பார்த்தபின்பு தற்பொழுது சீர்திருத்த நாடகங்களுக்கு மக்கள் நல்லஆதரவுகொடுக்கின்றனர் என்பது நன்றாகவிளங்குகிறது. ஆகவே இனியாகிலும் T. K. S. சகோதரர்கள்போன்றார் மற்றுமுள்ள நடிகர்கள் நாடகக்கம்பெனிகள் சீர்திருத்தநாடகங்களையே நடத்தக்கேட்டுக்கொண்டு, மக்கள், தோழர் அண்ணாத்துரை அவர்களின் "சந்திரோதயத்துக்கும் தோழர் N. S. கிருஷ்ணன் "கிந்தனார்" கதைக்கும்கொடுக்கும் ஆதரவைப்போலவே மற்றவர்களுக்கும்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு என்உரையை முடித்துக்கொள்கிறேன்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.